**ஏப்ரல் – 20**

# TNPSC துளிகள்

- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (AB PM-JAY) திட்டத்தினை செயல்படுத்தும் 34வது மாநிலமாக ஒடிசா மாறியுள்ளது.
- உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தினேஷ் மகேஸ்வரி 23வது சட்ட ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மும்பை-மன்மத் பஞ்சவடி விரைவு இரயில் ஆனது, முதல் முறையாக ATM நிறுவப்பட்ட முதல் இரயில் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- techvantage.ai எனப்படும் புத்தாக்க நிறுவனமானது, CrewAI நிறுவனத்துடன் இணைந்து, ஏஜென்டிக் AI என்ற வாரத்தின் ஒரு பகுதியாக இந்தியாவின் முதல் பெரிய அளவிலான ஏஜென்டிக் AI ஹேக்கத்தான் நிகழ்ச்சியினை நடத்தியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## விண்வெளித் தொழில்துறைக் கொள்கை – 2025




- தமிழ்நாடு மாநில அமைச்சரவையானது, 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு விண்வெளி தொழில்துறைக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- விண்வெளித் தொழில்நுட்பத்தில் 10,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பது, இந்தத் துறையில் குறைந்தது 10,000 வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவை இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.
- அமெரிக்காவின் புளோரிடாவின் புகழ்பெற்ற விண்வெளிப் பயன்பாடு சார் கடற்கரை என்ற கருத்துருவின் மூலம் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாடு அரசானது மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய நான்கு தென் மாவட்டங்களில் ஒரு 'விண்வெளி பயன்பாட்டு மையத்தினை' நிறுவ உள்ளது.
- சுமார் 25 கோடி ரூபாய் அல்லது அதற்கும் குறைவான வருடாந்திர வருவாய் கொண்ட புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் இத்தகைய விண்வெளி சார் தொழில்துறை சூழல் அமைப்பில் பங்கேற்க தகுதியுடையவையாகும்.
- காப்புரிமைகள், பதிப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் பல்வேறு புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்தல் போன்ற சில நடவடிக்கைகளுக்காக என முதலீட்டுக் காலத்தில் விண்வெளி நிறுவனங்கள் செய்யும் செலவில் சுமார் 50 சதவீதத்தினை

இந்தக் கொள்கை மூலம் அரசுத் திருப்பிச் செலுத்தும்.

- கூடுதலாக, 300 கோடி ரூபாய்க்கு மேல் உள்ள விண்வெளித் துறைத் திட்டங்கள் ஆனது மிக பிரத்தியேகமாகக் கட்டமைக்கப்பட்ட ஊக்கத் தொகை தொகுப்புத் திட்டத்திற்குத் தகுதியுடையவையாகும்.

## முருகர் சிலைகள்




- மாநிலத்தில் உள்ள மூன்று கோயில்களில் 100 அடிக்கு மேல் உயரமுள்ள மூன்று முருகர் சிலைகள் நிறுவப்பட உள்ளன.
- கோயம்புத்தூர் மாவட்டத்திந மருதமலையில் உள்ள சுப்பிரமணியசுவாமி கோவிலில் ஓர் அருங்காட்சியகம் மற்றும் வாகன நிறுத்துமிட வசதிகளுடன் 184 அடி உயரமுள்ள முருகர் சிலை நிறுவப்பட உள்ளது.
- ஈரோடு மாவட்டத்தில் உள்ள திண்டலில் உள்ள வேலாயுதசுவாமி கோவிலில் 180 அடி உயரமுள்ள ஒரு சிலை நிறுவப்படும்.
- இராணிப்பேட்டை மாவட்டத்தின் திமிரியில் உள்ள சுப்பிரமணியசுவாமி கோவிலில் 114 அடி உயரமுள்ள சிலை நிறுவப்பட உள்ளது.

## தமிழை அலுவல் மொழியாகப் பயன்படுத்துதல்

- தமிழ் வளர்ச்சி மற்றும் தகவல்தொடர்புத் துறையால் தற்போது ஓர் பரிந்துரையானது வெளியிடப் பட்டுள்ளது.
- இது கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள், தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது.
- இந்தப் பரிந்துரையில், அதிகாரப்பூர்வத் தகவல் தொடர்புகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்திலும் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்காக வேண்டி ஏற்கனவே உள்ள வழிமுறைகளைப் பின்பற்றுமாறு அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.
- அரசு ஆணைகள் அனைத்தும் தமிழ் மொழியில் மட்டுமே பிறப்பிக்கப் பட வேண்டும் என்றும், சுற்றறிக்கைகளும் தமிழ் மொழியில் இருக்க வேண்டும் என்றும் முந்தைய சில உத்தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- விலக்கு அளிக்கப்பட்ட விவகாரங்களைத் தவிர, மற்ற அனைத்துக் கடிதங்கள், தகவல் தொடர்புகள் மற்றும் கடிதப் பரிமாற்றங்களும் தமிழ் மொழியில் மட்டும் தான் இருக்க

வேண்டும்.

- பொதுமக்களிடம் இருந்து தமிழ் மொழியில் பெறப்படும் கடிதங்களுக்கு, தமிழிலேயே பதில் அளிக்க வேண்டும்; மற்றும் அவர்களைப் பற்றிய குறிப்புகளும் தமிழில் இருக்க வேண்டும்.
- அரசு ஊழியர்கள் இனி அனைத்துக் கடிதங்களிலும், தமிழில் மட்டுமே கையெழுத்திட வேண்டும்.
- மேலும், குறிப்பிடப்பட்ட கடிதங்கள் மற்றும் அரசு ஆணைகளை ஆங்கில மொழியில் வழங்குவதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகள், இவற்றைத் தமிழ் வளர்ச்சி மற்றும் தகவல் தொடர்புத் துறையின் மொழிபெயர்ப்புப் பிரிவுக்கு அனுப்பி அவற்றை இனி தமிழில் மொழி பெயர்க்க வேண்டும்.
- 1956 ஆம் ஆண்டு அலுவல் மொழிச் சட்டத்தின் படி, தமிழ் மொழியானது தமிழ்நாடு அரசின் ஆட்சி மொழியாக உள்ளது.




## கல்வி நிறுவனங்களில் சாதிப் பெயர் அடையாளங்கள்

- 2025-26 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் இனி அரசு அல்லது தனியார் நடத்தும் எந்தவொரு பள்ளியாகவோ அல்லது கல்லூரியாகவோ இருந்தாலும், சாதிப் பெயர் அடையாளங்களைக் கொண்டிருக்கக் கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், திருச்செங்கோடு வட்ட கொங்கு வேளாளர் சங்கம் மற்றும் Poor Educational Fund ஆகிய அமைப்புகள் தாக்கல் செய்த பல்வேறு நீதிப் பேராணை மனுக்களை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.
- சம்பந்தப்பட்டப் பள்ளி நிர்வாகங்கள் சாதி அடையாளங்களைக் கைவிடத் தவறினால், அவற்றின் அங்கீகாரம் திரும்பப் பெறப்பட வேண்டும்.
- அரசுப் பள்ளிகளின் பெயர்களில் இருந்து, ‘கள்ளர் சீரமைப்பு’ மற்றும் ‘ஆதி திராவிடர் நலம்’ போன்ற சொற்களை நீக்கி, ஓய்வு பெற்ற நீதிபதி K.சந்துரு தலைமையிலான குழு

அளித்த பரிந்துரைகளை அமல்படுத்தவும் மாநில அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

- சாதி அமைப்பை நிலை நிறுத்தும் சங்கங்கள், அத்தகையச் சங்கங்கள் தொடர்பான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்காக என்று அரசியலமைப்பின் 226வது சரத்தின் கீழ் நீதிப் பேராணை அதிகார வரம்பைப் பயன்படுத்த முடியாது எனவும் கூறியுள்ளது.
- சாதிய அமைப்பானது ஒரு மதத்தோடு மட்டும் நின்று விடாமல் கிட்டத்தட்ட அனைத்து மதங்களிலும் பரவியுள்ளது.




## அரசு ஊழியர்கள் புத்தகம் எழுத தடை

**தமிழக அரசுக்கு எதிராக புத்தகம் எழுத அரசு ஊழியர்களுக்கு தடை**

அரசு ஊழியர்கள் புத்தகம் எழுதுவது, வெளியிடுவது தொடர்பான திருத்த அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நடத்தை விதிகள் 1973- ன்படி ஒவ்வொரு புத்தகத்தையும் வெளியிடுவதற்கு முன் அனுமதி பெற வேண்டும், வெளியீட்டாளரிடம் இருந்து ஊதியம் பெறும்போது அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும் என விதி உள்ளது. அரசு ஊழியர்கள் எழுதும் புத்தகத்தில் அரசுக்கு எதிரான எந்த விமர்சனமும் இல்லை என்றும், மாநிலத்தின் சட்ட ஒழுங்கை பாதிக்கும் வகையில் உரை இல்லை என்றும் ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

- அரசின் கொள்கைகளுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட எந்தவொரு கலைப் படைப்பையும் வெளியிடக் கூடாது எனத் தமிழ்நாடு அரசு தனது ஊழியர்களுக்குத் தடை விதித்துள்ளது.
- இது 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நடத்தை விதிகளின் கீழான சில விதிகளை திருத்தம் செய்துள்ளது.
- எந்தவொரு அரசு ஊழியரும் இனி எந்தவொரு புத்தகத்தையும் வெளியிடுவதற்கு முன்

அனுமதி பெற வேண்டும் என்று அந்தத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ இலக்கியம், சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கவிதை போன்ற நூல்களை எழுதும் அரசுப் பணியாளர், வெளியீட்டு நிறுவனங்களிடம் இருந்து சன்மானத்தினைப் பெற்ற உடன், உடனடியாகப் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் அது குறித்தத் தகவலைத் தெரிவிக்க வேண்டும்.

❖ அந்தப் புத்தகத்தில் அரசுக்கு எதிராக என்று எந்த ஒரு விமர்சனமும் அல்லது கண்டன அறிக்கையும் குறிப்பிடப்படவில்லை என்று அந்த அரசுப் பணியாளர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

❖ மாநிலத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதிக்கும் எந்த ஆட்சேபனைக்குரிய உரை / உள்ளடக்கமும் அந்தப் புத்தகத்தில் இல்லை என்பதை அவர் உறுதி செய்ய வேண்டும்.

❖ மேலும் புத்தகத்தின் நகல்களை விற்பனை செய்வதை விளம்பரப்படுத்துவதற்காக, அரசுப் பணியாளர் தனது அலுவல் நேரத்தையும், அதிகாரப்பூர்வச் செல்வாக்கையும் பயன்படுத்தக் கூடாது.

❖ எந்தவொரு அரசு ஊழியரும் அரசிடம் இருந்து முன் அனுமதி பெறாமல், வெளியீட்டு நிறுவனங்களிடம் இருந்து மொத்தச் சன்மானம் அல்லது உரிமம் அடிப்படையிலான சன்மானம் பெறக்கூடாது என்று புதிய விதிகள் கூறுகின்றன.

## மேற்குத் தொடர்ச்சி மலையில் 28 நெகிழிப் பொருட்களுக்குத் தடை




❖ தமிழகத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் சுமார் 28 நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டிற்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

❖ இந்தத் தடையானது நீலகிரி முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகத்தியர் மலை உயிர்க்கோளக் காப்பகம் வரை விரிவுபடுத்தப்படும்.

❖ இந்தத் தடையானது அனைத்து மலைவாழ் தளங்கள், சரணாலயங்கள் மற்றும் புலிகள் வளங்காப்பகங்களுக்கும் பொருந்தும்.

❖ தடை செய்யப்பட்ட இப்பொருட்களில் தண்ணீர் / பழச்சாறுகள் அடைக்கப் பயன்படும் ஒருமுறை மட்டுமே என்று பயன்படுத்தக் கூடிய நெகிழிக் குடுவைகள், உணவுப் பொதிகளுக்குப் பயன்படுத்தப் படும் நெகிழித் தாள்கள் / ஒட்டுச் சுருள்கள், உணவு மேசைகளில் விரிக்கப் பயன்படும் நெகிழித் தாள்கள், நெகிழித் தட்டுகள், நெகிழிப் படலமிடப் பட்ட காகிதத் தட்டுகள், நெகிழிப் படலமிடப்பட்ட காகிதக் கோப்பைகள், நெகிழி டீ கோப்பைகள், நெகிழிக் குவளைகள், வெண்மெத்துகள் ஆகிய அனைத்தும்

அடங்கும்.

- நெகிழிப் படலமிடப்பட்ட சிறு பைகள், நெய்யப்படாத சிறு பைகள், தண்ணீர் பைகள்/ பொதிகள், நெகிழி உறிஞ்சு குழாய்கள், நெகிழிக் கொடிகள், நெகிழிக் குச்சிகள் கொண்ட காது குடையும் பஞ்சுகள், அனைத்து அளவு மற்றும் தடிமன் கொண்ட நெகிழி பைகள், நெகிழிக் குச்சிகள் கொண்ட மிட்டாய்கள், நெகிழிக் குச்சிகள் கொண்ட பனிக் கூழ், அலங்காரத்திற்கான பாலிஸ்டிரீன் போன்றவற்றுக்கும் உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
- நெகிழி முள்கரண்டிகள், நெகிழிக் கரண்டிகள், நெகிழிக் கத்திகள், இனிப்புப் பெட்டிகளில் பொதியிடும் அல்லது பொதிச் சுருள்கள், அழைப்பிதழ் அட்டைகளைச் சுற்றிச் சுற்றப் பட்டுள்ள அல்லது பொதிச் சுருள்கள், சிகரெட் பாக்கெட்டுகளைச் சுற்றிச் சுற்றப் பட்டுள்ள சுருள்கள், 100 மைக்ரான் அளவிற்குக் குறைவான நெகிழி அல்லது PVC விளம்பர திரைச்சீலைகள், நெகிழிக் கிளறு கரண்டிகள் மற்றும் நெகிழித் தட்டுகள் ஆகியவையும் இனி தடை செய்யப்பட வேண்டும் என்று அமர்வு நீதிமன்றம் / ஈராயம் தெரிவித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் இந்த மாநிலம் முழுவதும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய நெகிழிப் பொருட்களுக்கு அரசு தடை விதித்துள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.
- 2019 ஆம் ஆண்டில் நீதிபதிகள் நீலகிரி மற்றும் கொடைக்கானலில் குறிப்பிட்ட நெகிழிப் பொருட்களுக்குத் தடை விதித்து உத்தரவிட்டனர்.
- இம்மாநில அரசானது, 2019 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான அதன் அதிகாரங்களைப் பயன்படுத்துமாறு நீதிபதிகளுக்கு உத்தரவிட்டனர்.
- இனிமேல் நீலகிரி, கொடைக்கானல் மலைகள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் முழுவதிலும் ஒரு நெகிழிப் பொதி, சிறு பொதி அல்லது பொதி செய்யப் பயன்படும் நெகிழிப் பொருட்களைக் கூட பயன்படுத்த முடியாது.

# தேசியச் செய்திகள்


## கஞ்சா கச்சிபௌளி வனப்பகுதி தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் கருத்து




- 100 ஏக்கர் பரப்பிலான கஞ்சா கச்சிபௌளி "வனப்" பகுதி அழிக்கப்பட்டதால் பாதிக்கப் பட்ட வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தெலங்கானா வனவிலங்குக் காப்பாளருக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- ❖ இந்தப் பகுதியில் இனிமேல் ஒரு மரத்தைக் கூட வெட்டக்கூடாது என்று தெலங்கானா அரசுக்கு உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.
- ❖ உச்ச நீதிமன்றமானது வேலைவாய்ப்பு மற்றும் மேம்பாட்டினை விரும்புகிறது. ஆனால் அது சுற்றுச்சூழலை அழித்து உருவாக்கப்படக் கூடாது என்று கருத்து தெரிவித்துள்ளது என்று நீதிபதி கவாய் தெரிவித்தார்.
- ❖ முன்னதாக, இந்த கஞ்சா கச்சிபௌலி ஆனது 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 'காடுகள்' பிரிவின் கீழ் உள்ளதாக மனுதாரர்கள் கூறியிருந்தனர்.

## உருது மொழி தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் கருத்து





- ❖ இந்தியாவின் ஒருங்கிணைந்த கலாச்சாரப் பண்பாட்டின் மிகவும் சிறந்த உதாரணம் உருது மொழி என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ❖ இது மகாராஷ்டிராவின் அகோலா மாவட்டத்தில் உள்ள படூர் நகராட்சி மன்றத்தில் உள்ள புதியக் கட்டிடத்தின் குறியீட்டுப் பலகையில் உருது பயன்படுத்தப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் இந்தக் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ மராத்தி மொழியானது, மகாராஷ்டிரா மாநிலத்தின் ஒரு அதிகாரப்பூர்வ மொழி என்று மேல்முறையீட்டாளர் தரப்பு தெரிவித்தது.
- ❖ அதற்குப் பதிலளித்த நீதிமன்றம், இந்தி மொழியை இந்துக்களின் மொழியாகவும், உருது மொழியை முஸ்லிம்களின் மொழியாகவும் கருதுவது "யதார்த்த நிலையில் இருந்து விலகுதல்" என்று நீதிமன்றம் கூறியது.
  - ○ ஒரு மொழியானது தகவல் தொடர்பிற்கான ஒரு கருவி மட்டுமே அன்றி அது ஒரு மதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை.
  - ○ "மொழி என்பது மதம் அல்ல. மொழி என்பது எந்த மதத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தாது. மொழி என்பது ஒரு சமூகத்துக்கும், ஒரு பிராந்தியத்துக்கும், மற்றும் மக்களுக்கும் உரியது; ஒரு மதத்துக்குரியது அல்ல. மொழி என்பது கலாச்சாரம். மொழி என்பது ஒரு சமூகத்தின் மற்றும் அதன் மக்களின் நாகரீக வாழ்க்கையினை மதிப்பிடுவதற்கான அளவுருவாகும்".
- ❖ உருது மொழி என்பது, வடக்கு மற்றும் மத்திய இந்தியப் பகுதியின் சமவெளிகளின் ஒரு ஒருங்கிணைந்தக் கலாச்சாரக் கூட்டிணைவான கங்கை-ஜமுனி தஹ்சீப் அல்லது இந்துஸ்தானி தஹ்சீப்பின் மிகச் சிறந்த மாதிரியாகும்.

- உருது மொழியானது அந்நிய மொழி அல்ல என்றும் நீதிமன்றம் கூறியது.
- இது இந்தியாவில் உருவாகி வளர்க்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, இந்தியாவில் உள்ள கவிஞர்களின் விருப்ப மொழியாக மாறியது.
- மராத்தி மற்றும் இந்தி ஆகியவை போன்று உருது மொழியும், இந்திய-ஆரிய மொழி ஆகும்.
- இந்தி மற்றும் உருது ஆகியவை அடிப்படையில் ஒரே மொழி என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- உருது முதன்மையாக நாஸ்டாலிக் எழுத்து வடிவிலும், இந்தி மொழி தேவநாகரி எழுத்து வடிவிலும் எழுதப்பட்டுள்ளது; ஆனால் கையெழுத்து வடிவம் எந்த ஒரு மொழியையும் உருவாக்காது.
- மொழிகளை வேறுபடுத்துவது அவற்றின் சொற்றொடர் அமைவு, இலக்கணம் மற்றும் ஒலிப்பு வடிவமாகும்.
- இந்தி மற்றும் உருது ஆகிய இரு மொழிகளின் இணைவு, இரு மொழிகளிலும் உள்ள மொழி நெறியாளர்களால் ஒரு தடையைச் சந்தித்தது என்பதோடு இந்தி மொழியானது சமஸ்கிருதமாகவும், உருது பாரசீகமாகவும் மாறியது.
- சாமானியர்களின் அன்றாட இந்தி மொழிப் பயன்பாட்டில் உருது சொற்கள் நிரம்பின.
- 'இந்தி' என்ற சொல் 'ஹிந்தவி' பாரசீகச் சொல்லிலிருந்து வந்தது.
- அரசியலமைப்பின் 345வது சரத்து வழங்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தி, உருது மொழியானது பல மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆட்சிப் பிரதேசங்களால் அவற்றின் இரண்டாவது அதிகாரப்பூர்வ மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ஆந்திரப் பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், தெலுங்கானா, உத்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் உருதுவை அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாகக் கொண்ட மாநிலங்களாகும்.
- ஒன்றிய ஆட்சிப் பிரதேசங்களான டெல்லி மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகியவையும் இந்த நடைமுறையைப் பின்பற்றுகின்றன.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தாய்மொழிகளின் ஒட்டு மொத்த எண்ணிக்கை 270 ஆக உயர்ந்துள்ளது.
- இந்த எண்ணிக்கையானது 10,000க்கும் மேற்பட்ட மொழி பேசுபவர்களைக் கொண்ட தாய்மொழிகளை மட்டும் கருத்தில் கொண்டு கணக்கில் வரப்பட்டது.
- இந்தியாவில் தாய்மொழிகளின் ஒரு உண்மையான எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருக்கும் என்று கூறுவது மிகையாகாது.

## எழுச்சிமிகு கிராமங்கள் திட்டம்-II

- மத்திய அமைச்சரவையானது, இரண்டாவது எழுச்சிமிகு கிராமங்கள் திட்டத்தினை (VVP-II) மத்திய அரசின் ஒரு திட்டமாக (மத்திய அரசிடமிருந்து மிகவும் முழுமையாக நிதியளிக்கப்படும் திட்டம்) அங்கீகரித்துள்ளது.
- VVP-I திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ளடக்கப்பட்ட வடக்கு எல்லைப் புறப் பகுதியைத் தவிர, சர்வதேச நில எல்லைகளை (ILBs) ஒட்டியுள்ள சில பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களின் விரிவான மேம்பாட்டிற்கு இது உதவும்.
- வளமான மற்றும் பாதுகாப்பான எல்லைகளை உறுதி செய்வதற்கும், எல்லைகளில் நடக்கும் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், எல்லைப் பகுதிகளை ஒட்டி வாழும் மக்களைத் தேசத்துடன் ஒருங்கிணைப்பதற்கும் சிறந்த வாழ்க்கை சூழல்கள் மற்றும் போதுமான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டு

உள்ளது.




## முதலாவது ITES-Q கொள்கை




- இந்திய அரசாங்கமானது, முதலாவது சர்வதேசத் தொழில்நுட்ப ஈடுபாட்டு உத்தி - குவாண்டம் (ITES-Q) கொள்கையினை வெளியிட்டுள்ளது.
- இது குவாண்டம் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமைகளில் (QSTI) மிகப்பெரும் புத்தாக்கத்தினை விரைவுப்படுத்துதல், புதுமைகளை வளர்ப்பது மற்றும் அதன் ஏற்பினை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குவாண்டம் அறிவியலில் பல தொழில்நுட்ப உத்திகளுக்கான இந்தியாவின் தொலை நோக்குத் திட்டத்தினை இந்த உத்தி குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இது முதலீடுகள், திறமை மேம்பாடு, அறிவுசார் சொத்து, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைச் செயல்பாடு போன்ற பல்வேறு முக்கியப் பகுதிகளில் கவனம்

செலுத்துகிறது.

- ஐக்கிய நாடுகள் சபையானது, 2025 ஆம் ஆண்டினைச் சர்வதேச குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டாகவும் நியமித்துள்ளது.

## குழந்தை கடத்தல் குறித்த உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் 2025

- உச்ச நீதிமன்றமானது, குழந்தைக் கடத்தல் மற்றும் அதன் விளைவாக எழும் கடும் குற்றங்களைத் தடுப்பதற்காக அனைத்து மாநிலங்களுக்குமான வழிகாட்டுதல்கள் தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- இந்த வழிமுறைகளைச் செயல்படுத்துவதில் ஏதேனும் மெத்தனம் இருந்தால் அது தீவிரமாக கருத்தில் கொள்ளப்பட்டு, நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.
- புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தைகள் காணாமல் போயிருப்பதும் கடத்தப்படுவதும் கண்டறியப்பட்டால் மருத்துவமனைகளின் உரிமம் இடைநிறுத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.
- "எந்தவொரு பெண்ணும் தனது குழந்தையைப் பெற்றெடுக்க எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது, பச்சிளம் குழந்தையை இனி அனைத்து வகையிலும் நன்கு பாதுகாப்பது அந்த மருத்துவமனை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.
- நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்கள் நிலுவையில் உள்ள அனைத்து குழந்தை கடத்தல் வழக்குகளையும் எடுத்து, அவை இனி ஆறு மாதங்களுக்குள் விசாரணைகள் முடிவடைவதை உறுதி செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளன.




## வக்ஃப் திருத்தச் சட்டம் 2025 தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு

- வக்ஃப் (திருத்தம்) 2025 சட்டத்தினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட 73 மனுக்களை உச்ச நீதிமன்றம் விசாரித்தது.
- அந்தச் சட்டத்தின் விதிகள் குறித்து உச்ச நீதிமன்றம் கடுமையான சில கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது.
- மே 05 ஆம் தேதி வரையில் "பயனாளர் வழி வக்ஃப் உரிமம்" உள்ளிட்ட வக்ஃப்

சொத்துக்களின் அறிவிப்பு எதுவும் நீக்கப்படாது அல்லது மத்திய வக்ஃப் சபை மற்றும் வாரியங்களுக்கு நியமனங்கள் செய்யப் படாது என்றும் மத்திய அரசு உறுதியளித்து உள்ளது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### IISR சூர்யா



- இந்திய வேளான ஆராய்ச்சி சபையின் இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் (IISR) ஆனது மசாலா/நறுமணப் பொருட்கள் தொழில் துறைக்காக ஒரு புதிய வெளிர் நிற மஞ்சள் வகையை உருவாக்கியுள்ளது.
- IISR சூர்யா எனப் பெயரிடப்பட்ட இந்தப் புதிய வகை மஞ்சள் ஆனது, பொடிகள் தயாரிக்கும் தொழில் துறைக்கான வெளிர் நிற வேர்த் தண்டுக் கிழங்கைக் கொண்டு உள்ளது.
- தற்போதுள்ள வெளிர் நிற வகைகளுடன் (மைடுகூர்) ஒப்பிடும் போது 20-30 சதவீதம் அதிக மகசூலை வழங்குகின்ற இது அதிக மகசூல் தரும் நீண்ட காலப் பயிர் வகை (9

மாதங்கள்) ஆகும்.

- கேரளா, தெலுங்கானா, ஒடிசா, ஜார்க்கண்ட் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்திலும் சாகுபடி செய்வதற்கு IISR சூர்யா பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## பொஹேலா போய்ஷாக் 2025

- வங்காளப் புத்தாண்டானது, பொய்லா பைஷாக் அல்லது நோபோபோர்ஷோ என்றும் அழைக்கப்படுகின்ற 'பொஹேலா போய்ஷாக்' அன்று தொடங்குகிறது.
- வங்காள மொழி சூரிய நாட்காட்டியில் போய்ஷாக் மாதத்தின் முதல் நாளில் வருகின்ற இத்தினம் வங்காளதேசத்திலும், அசாம், மேற்கு வங்காளம் மற்றும் திரிபுராவின் சில பகுதிகளிலும் பரவலாகக் கொண்டாடப்படுகிறது.
- வங்காள மக்களுக்கு ஒரு புதியத் தொடக்கத்தைக் குறிக்கின்ற இந்தப் புத்தாண்டு என்பது உள்ளார்ந்த கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய முக்கியத்துவத்தைக் கொண்டு உள்ளது.
- பண்டைய வங்காள மன்னர் ஷோஷாங்கோ, கி.பி 594 ஆம் ஆண்டில் தொடங்கிய வங்காள சகாப்தத்தைத் தொடங்கியப் பெருமைக்குரியவர் ஆவார்.




## தாங்ஜிங் மலைக் குன்றுகள் - புனித மெய்தே தளம்

- குக்கி-சோ குடிமை சமூக அமைப்புகள் ஆனது, மணிப்பூரின் சூரசந்த்பூர் மாவட்டத்தில் உள்ள தாங்ஜிங் மலையில் ஒரு புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு எதிராக மெய்தி சமூகத்தினை "எச்சரிக்கை" செய்துள்ளன.
- ஏப்ரல் மாதத்தில் அங்கு வருகை தரும் மெய்தி  சமூகத்தினருக்கு தாங்ஜிங் மலை ஒரு புனிதத் தலமாக கருதப்படுகிறது.
- பண்டைய காலங்களிலிருந்து, இந்த மலை உச்சியில் அமைந்துள்ள அந்த மலைகளின் பாதுகாவலரான இபுதோ தாங்ஜிங்கின் ஆலயத்திற்கு மெய்திகள் ஆண்டுதோறும் ஒரு யாத்திரை மேற்கொண்டு வருகின்றனர்.

- குகி-சோ பழங்குடியினர் இந்த மலை மெய்திகளின் பிரத்தியேக புனித தலம் என்பதை மறுக்கின்றனர்.





# இதரச் செய்திகள்

## ஜாலியன் வாலாபாக் படுகொலை மற்றும் சர் சங்கரன் நாயர்

- ஜாலியன் வாலாபாக் படுகொலையின் 106வது ஆண்டு நினைவு விழாவில் பெரும் தேசியவாதியும் சட்ட வல்லுநருமான சர் செட்டூர் சங்கரன் நாயர் அவர்களை இந்தியப் பிரதமர் நினைவு கூர்ந்து மரியாதை செலுத்தினார்.
- 1919 ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு சர் சங்கரன் மீது வழக்குத் தொடர்ந்த மூத்தப் பிரிட்டிஷ் அதிகாரிக்கு எதிராக நாயர் ஒரு புகழ்பெற்ற நீதிமன்றப் போராட்டத்தை நடத்தினார்.
- 1897 ஆம் ஆண்டில், அவர் இந்திய தேசிய காங்கிரஸின் இளம் தலைவரானார்.
- 1908 ஆம் ஆண்டில், அவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியாக நியமிக்கப் பட்டார்.
- அவரது மிகவும் பிரபலமான தீர்ப்புகள் சமூகச் சீர்திருத்தங்களுக்கான அவரது பெரும் உறுதிப்பாட்டை நன்கு சுட்டிக் காட்டின என்பதோடு புதாஸ்னா மற்றும் பாத்திமா (1914) இடையிலான வழக்கில், இந்து மதத்திற்கு மாறியவர்களைச் சாதியிலிருந்து விலக்கப் பட்டவர்களாகக் கருத முடியாது என்றும் அவர் தீர்ப்பளித்தார் என்பதோடு மேலும் சில வழக்குகளில், சாதிக் கலப்பு மற்றும் மதக் கலப்பு திருமணங்களை அவர் ஆதரித்தார்.
- 1919 ஆம் ஆண்டில், மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய மற்றும் மற்றும் நிர்வாகத்தில் இந்தியர்களின் பங்களிப்பை அதிகரித்த மாண்டெகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களில் உள்ள விதிகளை விரிவுபடுத்துவதில் அவர் மிக முக்கியப் பங்கு வகித்தார்.
- ஜாலியன் வாலாபாக் படுகொலையைத் தொடர்ந்து, அவர் அரசப் பிரதிநிதியின் சபையில் இருந்து ராஜினாமா செய்தார்.
- 1922 ஆம் ஆண்டில், நாயர் காந்தி மற்றும் அராஜகம் (Gandhi and Anarchy) என்ற ஒரு புத்தகத்தினை வெளியிட்டார் என்பதோடு அதில் அவர் காந்தியின் அகிம்சை, சட்ட மறுப்பு இயக்கம் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தின் சில முறைகள் குறித்த தனது கடும் விமர்சனத்தினை விவரித்தார்.
- அப்படுகொலை நடைபெற்ற சமயத்தில் பஞ்சாபின் துணை நிலை ஆளுநராக இருந்த மைக்கேல் ஓ'டயர், பல உயிர்களின் மரணங்களுக்கு வழி வகுத்த கொள்கைகளைப் பின்பற்றியதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

- பிரிட்டிஷ் நீதிமன்றமானது தனக்கு ஆதரவாக இருக்கும் என்று எதிர்பார்த்து, ஓ'டயர் இங்கிலாந்தில் நாயர் மீது அவதூறு வழக்கு தொடர்ந்தார்.
- வழக்கின் முடிவில், நாயர் 500 பவுண்டுகள் மற்றும் விசாரணைக்கான செலவுகளை வாதிக்கு செலுத்த உத்தரவிடப்பட்டது.
- நாயர் மன்னிப்பு கேட்டால் அபராதத்தைக் கை விடுவதாக ஓ'ட்வயர் கூறினார், ஆனால் நாயர் அதனை மறுத்தார்.



## வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட பட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கல்




- பல்கலைக்கழக மானியக் குழுவானது, 2025 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழு (வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப் பட்ட பட்டங்களுக்கு என்று சமமான அங்கீகாரம் மற்றும் மானியம்) விதிமுறைகளை அறிவித்துள்ளது.
- சர்வதேசச் சான்றிதழ்களுடன் வெளிநாட்டிலிருந்துத் திரும்பும் இந்திய மாணவர்கள், இந்திய நிறுவனங்களில் சேருவதற்கோ அல்லது வேலைவாய்ப்புக்காகவோ தங்கள் பட்டங்களுக்கு அங்கீகாரம் பெறுவதில் பெரும்பாலும் தாமதங்கள் மற்றும் நிச்சயம் அற்ற தன்மையை எதிர்கொள்கின்றனர்.
- மருத்துவம், மருந்தாக்கவியல், செவிலியம், சட்டம் மற்றும் கட்டிடக்கலை போன்ற துறைகள் மற்றும் பிற படிப்புகள் "இந்தியாவில் உள்ள அந்தந்தச் சட்டப்பூர்வ சபைகளின் விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்படும்.
- இனிமேல் அத்தகையப் படிப்புகள் அந்தந்த ஒழுங்குமுறை அமைப்புகளால் வகுக்கப் பட்ட குறிப்பிட்ட சில விதிமுறைகள் மற்றும் அங்கீகார நடைமுறைகளால் தொடர்ந்து நிர்வகிக்கப் படும்.

- வெளிநாட்டுப் பட்டங்களை அங்கீகரிப்பதற்கான நிபந்தனைகளையும் UGC பட்டியல் இட்டுள்ளது.
- அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள், அங்கீகாரம் பெறாத கல்வித் திட்டங்கள் அல்லது இந்தியாவில் உள்ள ஒழுங்குமுறை விதிமுறைகளை மீறுவதன் மூலம் பெறப்பட்ட பட்டங்கள் அதற்குச் சமமான ஒரு பட்டத்திற்குத் தகுதியற்றவை என்றும் UGC தெளிவு படுத்தியுள்ளது.

## மும்பைப் பங்குச் சந்தையின் 150 ஆம் ஆண்டு நிறைவு

- ஆசியாவின் மிகவும் பழமையான பங்குச் சந்தையான BSE நிறுவனம் தனது 150வது ஆண்டு நிறைவு விழாவை சமீபத்தில் கொண்டாடியது.
- உலகின் நான்காவது பெரிய பங்குச் சந்தையான BSE ஆனது, 1875 ஆம் ஆண்டு ஜூலை 09 ஆம் தேதியன்று தெற்கு மும்பையில் டவுன் ஹாலுக்கு அருகில் நிறுவப்பட்டது.
- 1855 ஆம் ஆண்டில், பங்கு தரகர்கள் பருத்தியை வாங்கவும், விற்கவும் ஆலமரத்தடியில் கூடினர்.
- 1865 ஆம் ஆண்டில், ஒழுங்கமைக்கப்படாத பங்குச் சந்தை மிகப் பெரிய ஏற்றத்தைக் கண்டது.
- அப்போது மும்பையில் 31 வங்கிகள், 62 கூட்டுப் பங்கு நிறுவனங்கள், 20 காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் 16 பருத்தி அழுத்தித் தொகுக்கும் நிறுவனங்கள் இருந்தன.
- 1957 ஆம் ஆண்டில், BSE நிறுவனத்திற்கு பத்திரங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (SCRA) கீழ் நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் பங்குக் குறியீடான S&P BSE சென்செக்ஸ் 1,000 என்ற அடிப்படைப் புள்ளியுடன் அதிகாரப் பூர்வமாக தொடங்கப் பட்டது.
- 2017 ஆம் ஆண்டில், BSE இந்தியாவின் முதல் பட்டியலிடப்பட்டப் பங்குச் சந்தையாக மாறியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★